**தேசிய லொத்தர் சபை - 2022**

**---------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய லொத்தர் சபையின்2022திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானகாசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்,பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தினதும்,1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின்ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின்2022 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,சபையின்தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபைஉள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின்தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின்தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின்தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின்நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1963 இன் 11 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14(3)(ஒ) பிரிவின் (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையினால் நடாத்தப்பட்ட தேசிய லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதியில் இருந்து கணிப்பிடும் போது | இந்த பரிசுகள் அவ்வப்போது இனங்கண்டு வழங்கிய நுகர்வோர்களை மேம்படுத்தும் பரிசுகளாக இருந்ததுடன், பிரதான பரிசு நாட்டில் உள்ளடங்கியிருக்கவில்லை . அதனால் இந்த பரிசுகள் | தேசிய லொத்தர் சபையின் சட்டத்தின் பிரகாரம் சபையினால் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு லொத்தரும் 06 மாதங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆறு மாத காலத்தை விஞ்சிய பின்னர் அது தேசிய லொத்தரில் ஏதாவது பரிசுகள் உரித்துள்ள நபர்களை கண்டறியாமையின் காரணமாக கையளிக்கப்படாத ஏதாவது பரிசுகள் காணப்படுமாயின் அரசுடமையாக்க வேண்டியமை குறிப்பிடப்பட்ட போதும் 2022 சனவரி 27 ஆம் திகதி முதல் 2022 யூன் 30 ஆம் திகதி வரை ஹந்தஹன லொத்தரின் மேலதிக இலட்சிணைக்காக வழங்கப்பட்ட பரிசு தொகையில் 06 மாதங்களை விஞ்சிய உரித்துக் கோரப்படாத ரூபா 11,879,880 தொகை ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் சபையின் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனினும், ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டிய இந்த பணம் மீளாய்வாண்டின் போது திறைசேரிக்கு அனுப்ப வேண்டியபொறுப்பாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரித்துக் கோரிய பரிசாக பரிசுத் தொகுதியில் உள்ளடங்கியிருக்கவில்லை . | விஞ்சிய உரித்துக் கோரப்படாத பரிசு பணம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைத்தல் பொறுப்பொன்றாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 யூலை 01 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஹந்தஹன லொத்தரில் மேலதிக இலட்சிணைக்காக வழங்கப்பட்ட பரிசுப் பணத்தில் 06 மாதங்களுக்குள் உரித்துக் கோரப்படாத ரூபா 25,921,120 தொகைக்காக தேவையான ஒதுக்கீடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஹந்தஹன லொத்தர் சீட்டில் மேலதிக இலட்சிணை சீட்டிழுப்பு பிரதான பரிசு படிமுறைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற விஷேட பரிசுக்குரியதாகும். இந்த நுகர்வோர் மேம்படுத்தும் பரிசை மீண்டும் அந்த ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் மிகுதி பரிசுகளுக்காக அந்த பணம் பயன்படுத்தப்படுகின்றது. | சகல லொத்தர்களும் 06 மாதங்களை விஞ்சி உரித்து கோரப்படாத பரிசுப் பணத்திற்காக தேவையான ஒதுக்கீடுகள் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விற்பனை கொட்டகை தயாரித்தல், விற்பனை கொட்டகை அடையாளப்படுத்துதல் மற்றும் நிர்மாண படிவங்களை தயாரித்தல் என்பவற்றிற்காக ரூபா 665,771 தொகை சபையினால் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு செலுத்த வேண்டியதாக இருந்த போதும் அந்த பொறுப்புக்கள் சபையின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதிஏற்பாட்டில் இருந்து அட்டுறு செலவினத்தின் கீழ் உள்ளடக்குதல் தவறவிடப்பட்டிருந்ததை அறிவித்திருப்பதுடன், இந்த ஆண்டில் உரிய தீர்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதற்குரிய சீராக்கங்களை உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சபையினால் செலுத்த வேண்டிய பொறுப்புக்களுக்காக நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் சுபிரி வாசனா லொத்தர் ஒதுக்க மீதியிலும் மற்றும் 06 மாதங்களை விஞ்சிய உரித்துக் கோரப்படாத பரிசு பெறுமதி மீதிகளுக்கும் இடையில் முறையே ரூபா 378,500 மற்றும் ரூபா 25,641,271 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் உள்ள ரூபா 233,055,845 ஆன பெசிவ் மற்றும் உடன் லொத்தர் கடன்பட்டோர் 118 பேர்களுக்கு இடையே 2022 திசெம்பர் 31 இல் கணக்காய்விற்கு மீதி உறுதிப்படுத்துதல் ரூபா 16,440,443 ஆன 08 கடன்பட்டோர்களுக்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெசிவ் மற்றும் உடன் லொத்தர் கடன்பட்டோரின் கூட்டு மொத்தம் ரூபா 216,615,402 ஆன 110 கடன்பட்டோரில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு மீதி உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்தி அனுப்புவதற்காக கடிதம் அனுப்பப்பட்ட போதும் மீதிகளை உறுதிப்படுத்தி அறிவித்தல் நடைமுறை ரீதியில் அநேகமானவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. | சபை கடன்பட்டோரின் மீதியை உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு வழங்குவதற்காக உதவி வழங்க வேண்டியிருந்ததுடன், அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்விற்கு மீதி உறுதிப்படுத்துதல் மேற்கொண்ட கடன்பட்டோர்களுக்கு இடையே இரண்டு கடன்பட்டோர் மாத்திரம் உரிய மீதிகளுடன் இணங்கியிருந்ததுடன்,ரூபா 1,964,108 ஆன கடன்பட்டோரின் மீதி பிழையாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மிகுதி 05 கடன்பட்டோர்களும் அவர்களுக்கு அவ்வாறான கடன் தொகை செலுத்துவதற்கு இல்லாதிருந்ததாக அறிவித்திருந்தனர். அதன் பிரகாரம் உரிய 05 கடன்பட்டோர்களுக்கு மாத்திரம் கடன்பட்டோர் மீதியில்ரூபா 8,691,754 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | லொத்தருக்காக அறவிட வேண்டிய பெறுமதிகளுக்காக கடன்பட்டோரினால் 2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் தீர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கான காரணங்களை பரீட்சித்து கணக்குகளில் சரி செய்து மற்றும் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நேரடி லொத்தர்களுக்குரிய கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட கொழும்பு எயார்போட் சுபர்ரோ ரூபா 4,510,280 தொகை மற்றும் டொலர் போசுன் ரூபா 964,678 லொத்தர் சீட்டுக்களுக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர்களுக்குரிய மீதி நிரலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு எயார்போட் சுபர்ரோ லொத்தருக்காக ரூபா 4,510,280 மற்றும் டொலர் போசுன் ரூபா 964,678 கடன்பட்டோர் மீதி காணப்பட்டது. | சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பல்வேறு பணிகளுக்காக வெளித்தரப்பினர் மூவருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 1,141,490 ஆன 02 முற்பணங்கள் 2019 ஆம் ஆண்டில் இருந்தும் மற்றும் ரூபா 10,000 மீதியொன்று | 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,141,490 ஆன தீர்த்து வைக்கப்படாத முற்பணத் தொகை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 126,000 தொகை, கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா | சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டில் இருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரையும் அறவிடப்படாமல் காணப்பட்டது. | 1,005,490 தொகை மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 தொகை ஆகும். | |
| (உ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை விற்பனை கொட்டகைகள் தயாரிப்பதற்காக 51 விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 450,958 தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்படாமல் காணப்பட்டது. | இந்த ஆண்டின் இறுதியின் போது இந்த பணம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் தீர்க்கப்படும். | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபையின் முன்னாள் உத்தியோகத்தர்களினால் மீண்டும் கையளிக்கப்படாத சொத்துக்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 275,908 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன்,அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நானாவித பெறவேண்டிய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்டு உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் அவ்வாறு இல்லையாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நிதிக் கூற்றுக்களில் ஊழியர் கடனின் கீழ் காண்பிக்கப்பட்ட மரணமடைந்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய விழா முற்பணம் ரூபா 34,840 தொகை,இடர் கடன் ரூபா 645,132 மற்றும் வீடமைப்பு கடன் ரூபா 1,521,196 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,201,168 இனை அறவிடுவதற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | சபையின் பதவியணியினருக்கு குடிநீர் வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களின் போது ஒரு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 102,500 வைப்பொன்றை தீர்த்து வைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய லொத்தர் சபைக்கு 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 05 வருடங்களுக்கு அண்மித்த காலமாக தனியார் கம்பனி ஒன்றுக்கு குடிநீர் போத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 06 சந்தர்ப்பங்களின் போது வைப்பு பணம் எமது நிறுவனத்தின் மூலம் வைப்புச் செய்யப்பட்டிருந்தமை ஆவணங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | விற்பனை முகவருக்கு 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்காக ரூபா 65,000 தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 65,000 தொகை இந்த ஆண்டில் அறவிடுவதற்கு முடியுமான வகையில் அவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த அங்கத்துவ பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டின் போது கணனி மற்றும் உபகரணங்களுக்காக விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 92,336 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய மாவட்ட விற்பனை முகவர் பதவி பல வருடங்களுக்கு முன்னர் செயலிழந்து காணப்பட்டமையால், பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கணக்குகளில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை மாவட்ட விற்பனை முகவர்களுக்கு விற்பனை கொட்டகைகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அறவிட்டரூபா | சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட விற்பனை கொட்டகைகளுக்காக விற்பனை முகவர்களினால் ஆரம்பமாக செலுத்த வேண்டிய தொகை சபைக்கு வைப்புச் | தாமதம் இன்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,941,900 தொகை உரிய தரப்பினருக்கு விற்பனை கொட்டகைகளை வழங்குதல் அல்லது பணத்தை தீர்த்து வைத்தல் இன்றி காணப்பட்டதுடன், அந்த மீதிதொடர்ந்தும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் புதிய விற்பனை கொட்டகைகளை வழங்குவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மாவட்ட விற்பனை முகவரினால் விற்பனை செய்யப்படுகின்ற லொத்தர் சீட்டுக்களுக்காக செலுத்தப்படுகின்ற சேவைக் கட்டணத்திற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய மாவட்ட விற்பனை முகவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,305,181 தொகை நிறுத்தி வைத்தல் பணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த மீதியில் 2011 ஆம் ஆண்டு முதல் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது உரிய முகவரிடம் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட சேவை கட்டணம் உள்ளடக்கியருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் சபைக்கு அறவிட வேண்டிய கடனிற்காக ரூபா 353,286 தொகை கழிக்கப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வெற்றியீட்டியவர்களுக்கு பரிசினை வழங்குவதற்காக வெற்றி பெற்றவர்களுக்கு லொத்தர் சீட்டுக்களை ஸ்கேன் செய்வதற்காக சபையினால் உரிய 50 விற்பனை முகர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,920,676 தொகை 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், அதில் 99 சதவீதம் | ரூபா 1,161,727 தொகையான கடன் ஈடுசெய்தல்களுக்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ரூபா 646,632 தொகை உரித்தான மாவட்ட விற்பனை முகவர் மூவரின் பணம் மிகுதி கடன்களை தீர்ப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட தொகை அடுத்த காலாண்டின் போது செலுத்தி | தாமதம் இன்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அதாவது 3,867,101 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்தது. | முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு | லொத்தர் வருமானத்தின் சட்டத்தில் குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்கள் குறைக்கப்பட்டதன் பின்னர் சேமிப்பு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாப கூட்டுத் தொகையான ரூபா 2,396,866,790 அவ்வாறு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்காமல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதிச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட சட்டத்துடன் கூறப்படுகின்ற பிரிவுகளின் பிரகாரம் நிதி அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்களினதும் விற்பனையில் சதவீத ரீதியான பணம் மாதாந்த ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படுகின்றது. | உரிய சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரசாங்க கூட்டுத்தபானம் எந்த தொகையும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன் அன்றி முதலீடு செய்ய முடியாதிருந்த போதிலும், சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில்ரூபா 5,511,647,458 மற்றும் 1,729,638,584 முறையே நிலையான வைப்புக்கள் மற்றும் கால ரீதியான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தேசிய லொத்தர் சபையினால் முதலீடு செய்யப்படுவது பரிசு செலுத்துவதற்காக ஒதுக்கி காணப்படுகின்ற நிதியாக இருந்துடன், சீட்டிழுப்பு நடைபெற்ற டிக்கட் சீட்டுக்களின் செல்லுபடி காலம் 06 மாதங்கள் ஆகும் வரை பரிசுக்காக உரித்து கோராதிருந்தமையால் அதுவரை அந்த பணம் தற்காலிகமாக உரிய கணக்குகளில் காணப்படுகின்றது. | உரிய சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி கூற்றறிக்கையின் 15(2) மற்றும் (3) ஆம் பந்திகள் | சபையினால் 1998 ஆம் ஆண்டின் போது அசரண சரண பெயரில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியத்தில் லொத்தர் பரிசு உரியவர்களின் பரிசுகளில் இருந்தும் மற்றும் லொத்தர் விற்பனை வருமானத்திலும் 0.005 சதவீத அளவான பெறுவனவுகள் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதியத்தின் மீதி ரூபா 26,580,127 ஆக இருந்தது. இவ்வாறு விஷேட நிதியமொன்றை பேணிச் செல்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டிய நிதி சட்ட ரீதியற்ற வகையில் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அசரண சரண நிதியத்தை பயன்படுத்தி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் தேசிய லொத்தர் சபையில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்காகவும் மற்றும் தேசிய லொத்தர் சபையில் சேவையாற்றி இருக்கும் போது மரணமடைந்த பதவியணியின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்காகவும் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் இறுதி வரையில் நலன்புரி நடவடிக்கைகளுக்காக நிதியத்தை ஈடுபடுத்தி இந்த நிதியத்தை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தேசிய லொத்தர் சபையின் 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு மற்றும் 1993 சனவரி 21 ஆம் திகதிய PE1/70/7/Voll என்ற திறைசேரி பிரதி செயலாளரின் கடிதம். | அரசாங்கத்திற்காக நடாத்திச் செல்லப்படுகின்ற சகல லொத்தர் வருமானத்திலும் 16.5 சதவீதம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 11 லொத்தர்களில் குறித்துரைத்த சதவீதத்தை விட குறைவாக அதாவது 10 சதவீத பெறுமதி மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பியமையினால் மேலும் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய பெறுமதி ரூபா 560,218,552 ஆகும். | இந்த கடிதத்தின் பிரகாரம் பெயரிடப்பட்ட லொத்தர் இரட்டை வடிவிலான மஹஜன சம்பத மற்றும் வாசனா சம்பத லொத்தர் சீட்டுக்களுக்காக 16.5 சதவீத பங்களிப்பு ஒன்று திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட லொத்தர்களின் ஆரம்பத்தின் போது 16.5 சதவீதம் ஆன சதவீதம் திரண்ட நிதியத்திற்கு வழங்குவதன் மூலம் லொத்தர் நடாத்திச் செல்லும் இலாப நட்டத்தின் அடிப்படையில் 10 | உரிய கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சதவீதம் அந்த லொத்தருக்காக தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றது. | |
| (உ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை – 2006 | | | |
| (i) | 4.2.1(ஆ) மற்றும் (இ) பிரிவுகள் | அடுத்து தொடர்ந்து வரும் ஆண்டின் பெறுகை நடவடிக்கைகளை விரிவாக காண்பித்து ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை செயற்பாடுகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத்திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2019 முதல் 2023 வரை சபையின் லொத்தர் சீட்டுக்கள் அச்சிடல், வழங்கல் மற்றும் கொண்டுவந்து கையளித்தலுக்குரிய பெறுகை பணிகளை உள்ளடக்கி விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபாரம் ஒன்றாக நடாத்தி செல்லப்பட்ட தேசிய லொத்தர் சபையின் லொத்தர் விற்பனை, சந்தை நடைமுறைகளை ஆய்வு செய்து வருடாந்தம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதன் பிரகாரம் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொண்டு வருடாந்தம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று வரிசை அமைச்சுக்கு அறிந்து கொள்வதற்காக அனுப்பப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும். |
| (ii) | 4.3 ஆம் பிரிவு | பெறுகைகளுக்குரிய மொத்த கிரய மதிப்பீட்டை சரியாக தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், 09 லொத்தர் வகைகளை அச்சிட்டுக் கொள்வதற்குரிய மொத்த கிரயம் சரியாக இனங்காணாமல் அமைச்சின் பெறுகைக் குழுவின் மூலம் அந்த பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், சரியான | இந்த பெறுகைகள் ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அதற்காக செலவாகும் என எதிர்பார்க்கின்ற கிரயம் அமைச்சின் பெறுகைக் குழு எல்லையை விஞ்சியமையினால் அமைச்சரவை பெறுகைக் குழு எல்லைக்கு அனுப்புவதற்கு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிரயத்தின் பிரகாரம் இந்த பெறுகை நடைமுறைகள் அமைச்சரவை பெறுகைகள் குழுவின் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்ததாக காண்பித்தன் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்ட அமைச்சின் பெறுகைகள் குழு பரிந்துரை வழங்கியிருந்து. | |
| (iii) | 4.2.3 ஆம் பிரிவு | பெறுகை நடவடிக்கைககளில் ஒவ்வொரு படிமுறைக்காக எடுக்கப்படுகின்ற காலத்தை சரியாக தீர்மானித்து அந்த கால பகுதியில் உரிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபையின் 2021 யூன் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 09 லொத்தர் வகைகளை அச்சிட்டுக் கொள்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் 2023 பெப்ரவரி இறுதி வரையிலும் 01 வருடமும் 08 மாதங்கள் கடந்திருந்த போதிலும், லொத்தர்களை அச்சிடும் நடவடிக்கைகளுக்காக வழங்குனர்களுக்கு கேள்வி கையளிப்பதற்கு தவறியிருந்தது. | 2020 ஆம் ஆண்டு முதல் நாட்டில் பரவியிருந்த கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடி போன்ற பெறுகைகள் நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாத விடயம் என்ற அடிப்படையில் பெறுகைகள் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டு அச்சிடல் பெறுகை கையளித்தல் தாமதமடைந்திருநததுடன், 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக இந்த பெறுகை அச்சிடல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும். |
| (iv) | 4.4 ஆம் பிரிவு | சபையின் வருடாந்த அச்சிடல் தேவையினை இனங்கண்டு அந்த தேவையை கொள்வனவு செய்வதற்கு பெறுகை நடவடிக்கைகளை அமுல்படுத்தாமல் குறுங்கால ரீதியில் ஒரு மாதம் அல்லது சில மாதங்களுக்காக அச்சிடல் தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாத காரணத்தின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக அச்சிடலாளர்களை தெரிவு செய்யும் ஒப்பந்தம் கையளித்தலுக்கு காலம் எடுத்தமையின் காரணமாக அந்த பெறுகைகளை பூர்த்தி | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இந்த நிலைமையில் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.4 இன் பிரகாரம் பெறுகை அதிகார எல்லை கைவிடப்பட்டமைக்கு காரணமாக இருந்தது. | செய்வதற்கு முடியுமான கால எல்லை தொடர்பாக கவனத்தில் கொண்டு லொத்தர் சீட்டுக்களை சந்தைக்கு தொடர்ச்சியாக வழங்கும் நோக்கில் இடையிடையே சில பெறுகைகளை மேற்கொள்வதற்கு சில நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (v) | 8.9.1(ஆ) மற்றும் 8.9.3 ஆம் பிரிவு | கேள்வி தாரர்களின் கேள்வி கையளிக்கப்பட்டதன் பின்னர் முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிட வேண்டிய போதிலும், லொத்தர் சீட்டுக்களை கையளிக்கும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களுடன் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் திகதி வரை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2022 சனவரி 18 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்த உடன்படிக்கை 08 மாதங்களின் பின்னர் அதாவது 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதியே கைச்சாத்திடப்பட்டிருந்தது. | ஏ.பீ.எஸ் கூரியர் (தனியார்) கம்பனி ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் ஆன செயலாற்றல் பிணைமுறி உரிய நிறுவனத்தால் சமர்ப்பிக்காமையின் காரணமாக ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாதிருந்தது. புரென்டோ லங்கா குரியர் கம்பனியின் தாய் கம்பனி வெளிநாடு ஒன்றில் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படையில் உரிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான ஆவணங்கள் (Board Resolution) சபைக்கு வழங்குவதற்கும் போதியளவான காலம் எடுத்திருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஊ) | தேசிய லொத்தர் சபையின் 1963 இன் 11 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 20(3) உப பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் லொத்தர் சீட்டை நடாத்துதல் தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய போதிலும், சபையினால் 2016 மே 21 ஆம் திகதி, 2018 மே 25 ஆம் திகதி மற்றும் 2022 | திருத்தப்பட்ட விதிகளை உள்ளடக்கிய இறுதி வரைவு 2022 நவம்பர் 11 ஆம் திகதி சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்ட சில விதிகள் தொடர்பாக மீண்டும் அவதானிப்புக்களை | உரிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மெகா பவர், தனநிதானய மற்றும் ஹந்தஹன போன்ற லொத்தர் சீட்டுக்களை பணிப்பாளர் சபை அங்கீகரித்த விதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபையினால் 2010 பெப்ரவரி 28 முதல் 2022 மார்ச் 01 வரையான காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட 05 வகையான லொத்தர் சீட்டிழுப்புக்களின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரித்து பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லலை லை. | சமர்ப்பிக்குமாறு 2023 சனவரி 03 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| • | 2013 சனவரி 31 ஆம் திகதிய 1975/37 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் கொவிசெத மற்றும் ஜாதிக சம்பத என்ற லொத்தர் சீட்டுக்களில் பரிசுகளை கையளிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானத்தில் 47 சதவீதம் மற்றும் சபையின் கணக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை முறையே 24.25 சதவீதம் மற்றும் 19.25 சதவீதம் ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், 2021 பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் மேற்கூறப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானத்தில் முறையே 49 சதவீதம் மற்றும் 52 சதவீதம் பரிசு கையளிப்பதற்காக மற்றும் சபையின் கணக்குகளுக்காக முறையே 22.25 சதவீதம் | திருத்தப்பட்ட விதிகளை உள்ளடக்கிய இறுதி வரைவு 2022 நவம்பர் 11 ஆம் திகதி சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அதில் குறிப்பிடப்பட்ட சில விதிகள் தொடர்பாக மீண்டும் அவதானிப்புக்களை சமர்ப்பிக்குமாறு 2023 சனவரி 03 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் 19.25 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2019 நவம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்கள சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டு முதல் அரச கூட்டுத்தாபனத்தை உள்ளடக்கிய அரசாங்க நிறுவனங்கள் WWW.promise.lk இணைய தளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் திட்ட முறைமை (e-GP) இன் கீழ் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், தேசிய லொத்தர் சபையினால் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த முறைமையின் கீழ் பதிவு செய்து அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது இலத்திரனியல் அரச பெறுகை திட்ட முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள் அந்த முறைமையின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் சபையின் வரி அறவிடக் கூடிய இலாபமான ரூபா 1,292,310,780 இற்காக செலுத்த வேண்டிய வருமான வரி கணிப்பிடும் போது முதல் அரை ஆண்டின் இலாபத்தின் அடிப்படையில் 24 சதவீத விகிதம் மற்றும் இரண்டாவது அரை ஆண்டில் இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீத விகிதம் உரித்தாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் முழு ஆண்டின் இலாபத்தின் அடிப்படையில் 24 சதவீத வரி விகிதம் உரித்தாக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் வருமான வரி | 2022 ஆம் ஆண்டிற்குரிய வருமான வரி கடப்பாட்டை கணிப்பிடும் போது மொத்த ஆண்டிற்கும் 24 சதவீதம் என கவனத்தில் கொண்டு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் இரண்டாவது அரை ஆண்டிற்காக 30 சதவீதமாக திருத்தப்பட்ட வரி பெறுமதி 2023 ஆம் ஆண்டின் போது சீராக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி செலுத்துதல் வேண்டும். |

ரூபா 38,769,324 இனால் குறைத்து கணிப்பிட்டதால் ஆண்டின் வரிக்கு பின்னரான இலாபம் அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,085,769,648 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 960,349,617 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 125,425,031 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நடப்பாண்டின் விற்பனை வருமானம் உயர்வடைந்து சென்றமை மற்றும் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக செலவினங்கள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ஒக்சோல் வீதியில் அமைந்துள்ள காணியில் வியாபார தொகுதியை நிர்மாணிப்பதை நோக்காகக் கொண்டு ஆலோசனை சேவையை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 27,178,359 தொகை 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை செலவிடப்பட்டு நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாக (Working Progress) காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்காமையினால் சபையினால் செலவிடப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | உரிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்ட போதும் அங்கீகாரம் வழங்க முடியாதிருந்தாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேவையான அங்கீகாரம் இன்றி செலவினங்கள் மேற்கொள்ள முடியாதிருந்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ஒக்சோல் வீதியில் அமைந்துள்ள காணியில் கட்டிடத்தை | முன்னாள் நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சினால் 2018 ஏப்ரல் 03 ஆம் திகதிய கடிதம் | சபைக்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கோ அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்கு முடியாமையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம் ஒன்றில் அலவலகம் நடாத்திச் செல்லப்படுவதுடன், 2022 திசெம்பர் 31 வரையில் அதற்காக ரூபா 487 மில்லியன் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சபையினால் வாடகைக்கு எடுக்கப்பட்ட இந்த கட்டிடத்தின் ஒரு பகுதி அனுமதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் , அதற்காக ரூபா 31,654,000 மேற்கூறப்பட்ட வாடகைச் செலவினத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. | மூலம் தற்போது அரசாங்கத்தில் காணப்படுகின்ற கொள்கையின் பிரகாரம் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அனுமதி வழங்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு எடுப்பதற்கோ சரியான மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | சபையினால் தேவையினை சரியான வகையில் திட்டமிட்டு மேம்படுத்தல் விடயங்களை கொள்வனவு செய்ய வேண்டியிருந்த போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேம்படுத்தல் விடயமாக கொள்வனவு செய்யப்பட்ட பெண் மற்றும் ஆண் குடைகள் முறையே 460 அலகுகள் மற்றும் 384 அலகுகள் களஞ்சியத்தில் எஞ்சியிருக்கும் போது அவை பகிர்ந்தளிக்கப்படாமல் 2023 சனவரி 14 ஆம் திகதி நடாத்தப்பட் மஹஜன சம்பத ஜயகிங் (Jaya King) 5000 விஷேட சீட்டிழுப்பு தடவையில் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக மேலும் 4,200 ஆண் குடைகள் மற்றும் 2,500 பெண்கள் குடைகள் என்பன ரூபா 8,292,650 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட லொத்தர் நடாத்தப்பட்ட | மஹஜன சம்பத லொத்தரின் விஷேட இணைப்பான அதன் 5000 ஆவதுசீட்டிழுப்பு தடவை 2023 சனவரி 14 ஆம் திகதியில் நடாத்தப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்திற்காக விற்பனை வலையமைப்பு மற்றும் நுகர்வோர்களைஆண்டு முழுவதும் ஊக்குவித்து லொத்தரை கொள்வனவு செய்வதற்காக மற்றும் விற்பனை மேம்படுத்தலுக்காக தளமொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மேம்படுத்தல் பொருள் வழங்கல் இந்த ஜயking நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | லொத்தர் ஒன்றின் மேம்படுத்தல் செலவினம் அந்த லொத்தர் நடாத்தப்பட்ட திகதிக்கு முன்னர் செலவிட்டு அதன் மூலம் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியில் 15 ஆண் குடைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டமையினால் மேற்கூறப்பட்ட மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபை செலவிட்ட பணம் சிக்கனமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு 2022 மார்ச் 05 ஆம் திகதி முதல் 2022 மே 04 ஆம் திகதி வரையான காலத்தில் கொவிசெத லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக அச்சிடல் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு முடியாமையால் அந்த கால எல்லையில் திட்டமிடப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பின் 55 தடவைகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. கடந்த ஆண்டில் கொவிசெத லொத்தர் சீட்டிழுப்பு 280 தடவைகள் நடாத்தப்பட்டு ரூபா 4,442 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன், ஒரு சீட்டிழுப்பு தடவையின் வருமானம் அன்னளவாக ரூபா 15.86 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கொவிசெத லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட தடவைகளுக்காக அண்ணளவாக ரூபா 872.3 மில்லியன் வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | டொலர் அனுப்புவதில் சிக்கல்கள் உள்ளதால் லொத்தர் வியாபாரத்தில் ஆகக் கூடிய சந்தை பகுதியை கைப்பற்றியிருந்த தேசிய லொத்தர் சபையின் அச்சகர்கள் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக இலங்கையில் கடதாசி பற்றாக்குறை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் விதித்ததன் அடிப்படையில் அரசாங்கத்தின் அச்சக கூட்டுத்தாபனத்தின் அச்சிடல் திணைக்களமும் உள்ளடலங்களாக சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்ததுடன், 55 லொத்தர் சீட்டிழுப்புக்களின் போது லொத்தர் இரட்டை அடிப்படை மாத்திரம் கைவிட்டு லொத்தர் சீட்டுக்கள் சந்தையில் பேணி ஒன்றிணைந்த நிதியத்தை வழங்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு வழங்குவதற்காக உரிய வழங்குனர்களுக்கு போதியளவான மூலப்பொருள் இருப்பு பேணிச் செல்லப்படல் வேண்டும். வழங்குனர்களினால் நிபந்தனைகளை மீறும் போது உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) NLB ஹந்தஹன லொத்தர் சீட்டை அச்சிடுவதற்கு | சிலோன் பிஸ்னஸ் எப்ல யஸ் (தனியார்) கம்பனி | உடன்படிக்கையின் பிரகாரம் லொத்தர் |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்ற அச்சிடல் நிறுவனம் 02 சீட்டிழுப்பு தடவைகளின் பின்னர் டொலர் நெருக்கடி மற்றும் கடதாசி பற்றாக்குறையின் அடிப்படையில் அந்த லொத்தர் சீட்டுக்கள் அச்சிடலை நிராகரித்தமையினால் சபையினால் 2022 மார்ச் 05 ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 03 வரை NLB ஹந்தஹன இல் 29 லொத்தர் சீட்டிழுப்பு தடவைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. சபையினால் அதற்கு முன்னர் நடாத்தப்பட்ட NLB ஹந்தஹன லொத்தரின் 37 சீட்டிழுப்பு தடவைகளில் சராசரியான வருமானத்தை கவனத்தில் கொள்ளும் போது ஹந்தஹன லொத்தரை நடாத்தாமையின் அடிப்படையில் அண்ணவாக ரூபா 263 மில்லியன் அளவில் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | NBL ஹந்தஹன முதலாவது சீட்டிழுப்பு தடவையை அச்சிட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த டொலர் நெருக்கடியின் காரணமாக அச்சிடல் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் ஹந்தஹன லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடியின் காரணமாக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை ஏற்பட்டமையினால் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அச்சிடல் ஒழுங்கமைப்பில் இருந்து சகல அச்சிடல் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அச்சிடல் திணைக்களமும் முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. | சீட்டுக்களை அச்சிட்டு வழங்குவதற்காக உரிய வழங்குனர்கள் போதியளவான மூலப்பொருள் இருப்பை பேணிச் செல்லல் வேண்டும். வழங்குனர்களினால் நிபந்தனைகளை மீறும் போது உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (இ) | டொலர் போச்சுன் லொத்தர் சீட்டு 2016 ஆம் ஆண்டில் விற்பனை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன். அந்த லொத்தர் சீட்டிழுப்பிற்காக 2022 திசெம்பர் 09 ஆம் திகதி வரை 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அச்சிடப்பட்ட 30,000 டிக்கட் சீட்டுக்களில் 6,603 அதாவது 22 சதவீதம் மாத்திரம் விற்பனை செய்து பணம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சீட்டிழுக்கப்பட்ட | 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் 6,603 லொத்தர் சீட்டுக்கள் மாத்திரம் விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது. அதனால் நட்டத்தினை விட மக்களின் நம்பிக்கையை கவனத்தில் கொண்டு 06 வருடங்களின் பின்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் இந்த டொலர் போச்சுன் லொத்தரில் விஷேட சீட்டிழுப்பு | புதிய லொத்தர் சீட்டை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் போது அதில் விற்பனை இலக்கு இயலுமான வரை சரியாக மதிப்பீடு செய்து அந்த விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டியிருந்ததுடன், நியாயமான காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | திகதியில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களில் கிடைத்த வருமானம் மற்றும் அந்த லொத்தர் சீட்டுக்களில் பரிசு பணக் கிரயம் மாத்திரம் கவனத்தில் கொள்ளும் போது தேசிய லொத்தர் சபைக்கு அ.டொலர் 33,970 அதாவது அண்ணளவாக ரூபா 12,263,170 நட்டத்தை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டது. | லொத்தர் சீட்டிழுப்பை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் டொலர் போச்சுன் 6,869 லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 6,603 லொத்தர் சீட்டுக்களில் இருந்து மாத்திரம் பணம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 266 லொத்தர் சீட்டுக்களில் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த 266 லொத்தர் சீட்டுக்களுக்கு உரிய பணத்தை அறவிட வேண்டிய நபர்களை இனங்கண்டு பணத்தை அறவிடாமல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 964,678 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | டொலர் போச்சுன் 6,869 லொத்தர் சீட்டுக்களின் விற்பனை அளவில் 6,603 லொத்தர் சீட்டுக்களுக்கு மாத்திரம் பணம் கிடைத்திருந்தது. மிகுதி 266 லொத்தர் சீட்டுக்களுக்காக சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படுகின்ற தினம் வரை பணம் கிடைத்திருக்கவில்லை. | விற்பனைக்காக லொத்தர் சீட்டுக்களை விநியோகத்தலை பரீட்சித்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மேற்கூறப்பட்ட லொத்தர் சீட்டுகளில் ஒரு பகுதியை விற்பனை செய்வதற்காக சபையின் விற்பனை பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு வழங்கப்பட்ட 552 லொத்தர் சீட்டுக்கள் தொலைந்து போயிருந்தன. இந்த லொத்தர் சீட்டுக்களுக்கு என்ன ஏற்பட்டது என இது வரை உறுதிப்படுத்தப்படாதிருந்தது டன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 552 | விற்பனைக்காக வழங்கப்பட்ட போதும் மீள கையளிக்காத, இனங்காண்பதற்கு முடியாதிருந்த லொத்தர் சீட்டுக்களின் அளவு 552 ஆகும். | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

லொத்தர் சீட்டுக்களின் பெறுமதி அ. டொலர் 5,520 அதாவது அண்ணளவாக ரூபா 2,029,262 அளவாக இருந்தது.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் அந்த சட்டத்தின் பல பிரிவுகள் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளின் போது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும், தற்போது சபையின் நோக்கங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய சட்ட வரைவொன்றை செய்வதற்கு 2017 பெப்ரவரி 22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/17/0295/719/026 இன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும், புதிய சட்டத்தை தயாரிப்பதற்கு சபை இது வரை தவறியிருந்தது. | தேசிய லொத்தர் சபையின் தற்போதைய நோக்கங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் புதிய வரைவு இறுதி கட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அமைச்சரவை திருத்தத்தின் அடிப்படையில் மீண்டும் புதிய அமைச்சரவை அங்கீகாரத்தை பெற வேண்டியதாக சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற சட்டத்தின் குறைபாடுகள் சரியான வகையிலும் மற்றும் புதிய மாற்றங்களை வெளிப்படுத்தும் வகையிலும் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து அது அல்லது புதிய சட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய லொத்தர் சபை தமது மாவட்ட விற்பனை முகவர்களுடன் கையொப்பம் இடுகின்ற உடன்படிக்கையின் பிரகாரம் பொதுவான லொத்தர் சீட்டிழுப்பு தடவைகளின் போது சகல மாவட்ட விற்பனை முகவர்களினாலும் கைக்காசுக்கே லொத்தர் சீட்டுக்கள் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததுடன், விஷேட சீட்டிழுப்பு தடவைகளின் போது கடன் | சீட்டிழுக்கப்படுகின்ற லொத்தர்களுக்கான கடன் மீதியான ரூபா 196,211,722 பெறுமதியில் 30 நாட்களுக்கு குறைவான கடன் பெறுமதி ரூபா 175,898,890 ஆகும். சீட்டிழுக்கப்படுகின்ற லொத்தர் சீட்டுக்களுக்காக 30 நாட்களை விஞ்சுகின்ற எஞ்சிய கடன் பெறுமதி ரூபா 20,312,832 ஆக இருந்ததுடன், அதில் 09 விற்பனை முகவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய | கடன்பட்டோரிடம் இருந்து கடன் கால எல்லையில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் கொள்வனவு செய்ய முடியும். எனினும், உரிய விஷேட சீட்டிழுப்பு தடவை நடாத்தப்பட்ட 03 வேலை நாட்களை உள்ளடக்கிய அந்த கடன் தொகை முழுமையாக தீர்க்கப்படல் வேண்டும். அவ்வாறே SMS மூலம் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்கின்ற 03 விற்பனை முகவர்களுக்கும் மற்றும் பதவியணியினரின் விற்பனை முகவர்களுக்கும் கடன் அடிப்படையில் லொத்தர் சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்ற போதும் உரிய சீட்டிழுப்பு தடவைகள் நடாத்தி 30 நாட்களுக்குள் அந்த பணம் முழுமையாக தீர்க்கப்படல் வேண்டும். எனினும், அதன் ஆரம்ப இணக்கப்பாட்டிற்கு முரணாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 30 தினங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 32,001,952 ஆக காணப்பட்டது. | பெறுமதி ரூபா 10,159,094 ஆகும். | |
| (இ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்கின்றவர்களிடம் இருந்து ரூபா 238,530,755 அறவிட வேண்டியிருந்தது. லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்கின்றவர்களினால் அதற்காக பிணையொன்று வைக்க வேண்டியிருந்த போதும்,ரூபா 40,960,581 கூட்டு தொகையான கடன்பட்டோர் பெறுமதிக்காக மாத்திரம் அவ்வாறு பிணை வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விஷேட சீட்டிழுப்பு தடவைகளில் கடனுக்கு விற்பனை செய்தல் தவிர லொத்தர் சீட்டுக்களைவிற்பனை | கடனை அறவிடுவதற்காக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கடன்பட்டோர்களில் சிலர் பகுதி பகுதியாக செலுத்துகின்றனர். ஏனைய கடன்பட்டோர் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் விற்பனையின் அடிப்படையில் ஏற்படுகின்ற நட்டத்தை அறவிடுவதற்காக தேவையான பிணை வைப்பு பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்கின்ற கடன்பட்டோர் மீதியில் 11 சதவீதம் அதாவது ரூபா 27,210,670 கடன் மீதிக்காக வங்கி பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட மொத்த கடன்பட்டோர் பெறுமதியில் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் ரூபா 15,969,774 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 14,223,839 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1-5 வருடங்களுக்கு இடையிலான கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 10,011,554 இனை அறவிடவதற்கோ அல்லது அதன் வங்கி பிணையுடன் உள்ள கடன்பட்டோரின் பெறுமதியான ரூபா 1,047,490 இனது வங்கி பிணையை பணமாக்கிக் கொள்வதற்கோ சபை தவரியிருந்தது. | இந்த கடன்பட்டோர் மீதியில் சீட்டிழுக்கப்படுகின்ற லொத்தர்களுக்காக ரூபா 2,710,613 தொகை, உடன் லொத்தர் சீட்டுக்களுக்காக ரூபா 8,748,881 தொகை மற்றும் கொழும்பு விமான நிலைய சுபிரி லொத்தர்களுக்காக ரூபா 4,510,280 ஆக காணப்பட்டது. | கடன்பட்டோரிடம் இருந்து கடன் கால எல்லை விஞ்சி செல்வதற்கு முன்னர் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தருதிரி சம்பத, சம்பத லக்னவரம, மனுசத் மெஹவர, ரன்கிருள மற்றும் ரஜதினும, செவன பெசிவ் என்ற லொத்தர்களை நடாத்தி 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. அதில் தருதிரி சம்பத, சம்பத லக்னவரம, செவன பெசிவ் பரிசு ஒதுக்க நிதியங்களில் பாதகமான மீதியான ரூபா 6,297,864 மற்றும் மனுசத் மெஹவர, ரன் கிருள, ரஜதினும பரிசு ஒதுக்க நிதியங்களில் சாதகமான | 2023 பெப்ரவரி மாதம் மாதாந்த கணக்குகள் தயாரிக்கும் போது உரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சீட்டிழுப்பு முடிவடைந்துள்ள லொத்தர் சீட்டுக்களின் ஒதுக்க மீதிகளை சரியாக கணக்குகளில் சீராக்கி கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதியாக ரூபா 10,150,180 தொகைகளை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | தேசிய லொத்தர் சபையில் மன்னார் சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,335,562 தொகை மற்றும் உரிய நிர்மாணத்தின் போது நிறுத்தி வைத்தல் பணமாக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,729,526 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 5,065,088 தொகையை தீர்த்து வைப்பதற்கோ அல்லது உரிய பணிகளை சரியாக நிறைவேற்றலோ இன்றி 2020 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய மீதியாக சந்தை மற்றும் ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது வரை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக எதிர்காலத்தில் உரிய பட்டியல்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்படும். | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை தீர்த்து வைப்பதற்கு முன்னர் உரிய பணிகளை சரியாக நிறைவேற்றுவதற்கு பொறியியல் ரீதியான உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுதல்தல் வேண்டும். |
| (எ) | வாசனா சம்பத, ஜயவிரு, தருதிர சம்பத, சம்பத லக்னவரம மற்றும் செவன பெசிவ் போன்ற லொத்தர் சீட்டிழுப்புக்களின் போது சபையினால் 2022 மார்ச் 01 ஆம் திகதி வரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த சீட்டிலுப்புக்களை நடாத்தி 06 மாதங்களுக்கு விஞ்சியிருந்த பரிசு பெறுமதி ரூபா 63,687,263 ஆகும். எனினும் வெற்றியீட்டியவர்கள் முன்வராதவைகள் இந்த பணத்திற்கு உரிமை கோரப்படாத பரிசாக இனங்கண்டு அதற்குரிய | இதில் குறிப்பிடப்பட்ட வாகன சம்பத, தருதிரி சம்பத, சம்பத லக்னவரம மற்றும் செவன பெசிவ் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை நட்டமடைந்ததன் அடிப்படையில் அந்த லொத்தர் சீட்டுக்களின் சீட்டிழுப்புக்களை நடாத்தி செல்லல் கைவிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அந்த ஒதுக்கத்தில் சேமிக்கப்பட்ட ஒதுக்க பணம் முன்னர் பெறப்பட்ட ஒதுக்கத்திற்கு மீண்டும் செலவு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | 06 மாதங்களை விஞ்சிய உரித்துக் கோரப்படாத பரிசு பணத்தை ஒன்றிணைந்த நிதியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | சபையினால் 2,283,619 செலவில் லொத்தர் பரிசு பொருட்களாக சமர்ப்பிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட Apple iphone, Leptop, தொலைக்காட்சி மற்றும் குளிரூட்டிகள் போன்ற 08 வகைளில் 19 விடயங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தரவாத காலம் கடந்து களஞ்சியத்தில் காணப்பட்டது. களஞ்சியத்தில் காணப்பட்ட சில பரிசுப் பொருட்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்குரிய அளவில் தரமான நிலையில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எல்லாப் பொருட்களும் ஒவ்வொரு விஷேட சீட்டிழுப்பு தடவைகளுக்காகவும் பயன்படுத்த முடியாமையால் வெற்றியாளர்களுக்கு வழங்க முடியாமையின் அடிப்படையில் எஞ்சியிருந்த பொருட்களை மீண்டும் ஈடுபடுத்துவதுடன், சில காலவீச்சுடன் இருந்தமையால் களஞ்சியத்தில் அவ்வாறு பொருட்கள் எஞ்சி காணப்பட்டது. | உத்தரவாத காலத்தில் உரிய லொத்தர் பரிசு பொருட்களை வெற்றியாளர்களுக்கு கையளிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பிற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரம் முறையான பிரகாரம் செயற்படாமை, இயந்திரத்தின் மூலம் பெறப்படுகின்ற இலக்கங்கள், எழுத்துக்கள் மற்றும் அடையாளங்கள் சரியாக ஒரே தடவையில் இயந்திரத்தின் மூலம் பெற முடியாமை. மற்றும் அந்த இலக்கங்கள், எழுத்துக்கள், இலட்சினைகளுடனான பந்துகள் இயந்திரத்தில் இறுகியமையின் காரணமான மீண்டும் மீண்டும் செயற்படுத்துவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் சீட்டிழுப்பு பணிகளுக்காக பங்குபற்றிய கணக்காய்வு பதவியணியினரால் அவதானிக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் வரைவு கணக்காய்வு | மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பு நடவடிக்கைகளின் போது ஏற்படுகின்ற சீட்டிழுப்பு பயன்படுத்தப்படுகின்ற சீட்டிழுப்பு இயந்திரம் பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படுவதுடன், ஜாதிக சம்பத சீட்டிழுப்பு இயந்திரமும் தற்போது சில சந்தர்ப்பங்களில் வழுக்களுடனான நிலைமை ஏற்பட்டிருந்தமையால் மற்றும் இந்த இயந்திரங்கள் இரண்டிற்காகவும் அவசர சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்துவதற்கு | லொத்தர் சீட்டிழுப்புக்கள் மிகவும் சரியாக மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிக்கையின் மூலமும் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மற்றும் பெறுகைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்ட ரூபா 150 மில்லியன் ஆன Ball Drawing இயந்திரம் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கொள்வனவு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | முடியுமான மாற்று இயந்திரம் ஒன்று காணப்படாமையினால் ஏழு அறைகளுடன் சீட்டிழுப்பு இயந்திரம் இரண்டு ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்காக இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கு பெறுகைகள் நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லொத்தர் சீட்டிழுப்புக்களின் போது பரிசாக வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 810,311 பெறுமதியான தங்க நாணயங்கள் மற்றும் தங்க பொருட்களில் 43 அலகுகளின் அளவு உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் வங்கி காப்பகங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் தற்போதைய பெறுமதி ரூபா 4,482,935 ஆகும். | இதற்கு முன்னர் விஷேட சீட்டிழுப்புக்களில் மேலதிக பரிசாக வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கு கொள்வனவு செய்து வெற்றியாளாகள் முன்வராமையின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாக காணப்பட்ட தங்க பொருள் விடயங்கள் 43 ஆக காணப்பட்டது. | எஞ்சுகின்ற பரிசு பொருட்களை எதிர்வரும் லொத்தர் சீட்டிழுப்பு தடவைகளில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய லொத்தர் சபையினால் 2018 யூன் மாதத்தின் போது 04 வகையான லொத்தர் சீட்டுக்களை அச்சிடல், வழங்கல் மற்றும் கொண்டுவந்து கையளிப்பதற்குரிய பெறுகை பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கேள்வி ஆவணங்கள் சரியாக பெறுகை | 2021 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பெறுகைகள் கையளித்தலுக்காக கவனத்தில் கொள்ளக் கூடிய மட்டத்தில் காலமொன்று கடந்திருந்ததுடன், 2023 பெப்ரவரி 13 ஆம் திகதிய அமைச்சரவையினால் கேள்வி கையளிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டதன் | லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் பெறுகை பணிகளை நியாயமான காலத்தில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தயாரிக்கப்படாமையினால் அதன் ஒரு வருடத்திற்கு பின்னர் அதாவது 2019 மே மாதத்தின் போது அந்த பெறுகை செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் 2020 பெப்ரவரி 14 ஆம் திகதி 09 வகையான லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல், வழங்கல் மற்றும் கொண்டுவந்து கையளித்தல் என்பவற்றுக்குரிய பெறுகை பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சரியாக வழங்கல் அதிகார எல்லையில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினால் அதில் 01 வருடமும் 04 மாதங்களுக்குப் பின்னர் 2021 யூன் 21 ஆம் திகதி பெறுகைகள் இரத்துச் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே மீண்டும் 2021 யூன் 25 ஆம் திகதி அந்த 09 வகையான லொத்தர் சீட்டுக்களுக்காக மீண்டும் ஒரு தடவை பெறுகை பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கேள்வி கையளிப்பதற்காக 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி வரை 01 வருடமும் 9 மாதங்களும் கடந்திருந்தது. அதன் பிரகாரம் தேசிய லொத்தர் சபைக்கு 2019 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் சரியான பெறுகை ஒன்றின் மூலம் லொத்தர் சீட்டுக்களை அச்சிடல், வழங்கல் மற்றும் கொண்டுவந்து கையளித்தல் என்பவற்றிக்காக வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தது. பின்னர் 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை ஒரு வருட காலப்பகுதிக்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகள் புதிய அச்சிடல் நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த வருட கால எல்லைக்காக லொத்தர் சீட்டுக்களின் பெறுகைக்கு பொருத்தமான வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு தவரியமையினால் 2019 முதல் 2022 திசெம்பர் 31 வரை 06 மாதங்கள், 04 மாதங்கள், 02 மாதங்கள், 01 மாதம் போன்ற குறுகிய கால பகுதியில் லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டுக் கொள்வதற்காக 68 சந்தர்ப்பங்களின் போது 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த வழங்குனர்களுக்கு அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.14 ஏற்பாடுகளுக்கு முரணாக கால நீடிப்பு வழங்கி லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தன. | உரிய சந்தர்ப்பம் மற்றும் சுற்றாடல் நிலைமைகளுக்கு இணங்க லொத்தர் சீட்டுக்களை சந்தைக்காக தொடர்ச்சியாக லொத்தர் சீட்டுக்களை வழங்கும் நோக்கில் காணப்படுகின்ற அச்சக நிறுவனங்களின் ஒப்பந்த உடன்படிக்கைக்காலம் பணிப்பாளர் சபை மற்றும் பெறுகைகள் குழு அங்கீகாரத்தின் கீழ் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை 2022 ஆம் ஆண்டின் போது தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறைமையின் கீழ் கொவிசெத மற்றும் ஹந்தஹன லொத்தர் சீட்டுக்கள் இரண்டிற்காக 04 மாதங்கள் வீதம் 02 சந்தர்ப்பங்களின் போது லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டுக் கொள்வதற்கு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், வரையறுக்கப்பட்ட போட்டியாளர் கேள்வி கோரும் முறைமையின் கீழ் 01 மாதம் வீதம் 05 சந்தர்ப்பங்களின் போது மேற்கூறப்பட்ட இரண்டு லொத்தர் சீட்டுக்களுக்காக அச்சிடல் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கொவிசெத லொத்தர் | பொருளாதார சூழ்நிலைகளின் காரணமாக சகல வழங்குனர்களுக்கும் பொதுவாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், அந்த நிலைமையை மிகவும் தெளிவாக ஆரம்பத்தில் சிலோன் பிஸ்னஸ் எப்லயன்ஸ் (தனியார்) கம்பனிக்கு முறையே அரச அச்சக கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்க அச்சக திணைக்களத்திற்கு தாக்கம் ஏற்பட்டிருந்ததுடன், பொது அடைவு மற்றும் அச்சிடல் துறைகளில் பாதுகாப்பாக அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற நிறுவனங்களும் மிகவும் வரையறுக்கப்பட்டமையினால் டீ. பீ.ஜே. ஹோல்டின்ஸ் | உடன்படிக்கையை மீறிய தரப்பினரிடம் இருந்து சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீட்டை அச்சிடுவதற்கு கையேற்ற பின்னர் அந்த வழங்கல் நிராகரித்த நிறுவனத்தின் மூலம் சபைக்கு ஏற்பட்ட நட்டம் செயலாற்றல் பிணை முறி மூலம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் ஒரு தடவை 2022 ஒக்டோபர் 31 முதல் 2022 நவம்பர் 30 வரையான காலத்தில் கொவிசெத லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. | (தனியார்) கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட செயறலாற்றல் பினை முறியை அறவிடுவதற்கோ அல்லது கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (ஈ) | சபையினால் 2022 சனவரி 20 ஆம் திகதி வரை விற்பனை செய்யப்பட்ட சுபிரி வாசனா லொத்தர் சீட்டுக்களுக்கு பதிலாக NLB ஹந்தஹன என்ற பெயரில் புதிய லொத்தர் சீட்டொன்று 2022 சனவரி 27 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் NLB ஹந்தஹன லொத்தர் சீட்டை அச்சிட்டு வழங்கும் பணிகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கேள்வி கோரப்படாமல் முன்னர் சுபிரி வாசனா அச்சிட்ட நிறுவனத்திற்கே அச்சிடல் நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற லொத்தர் சீட்டுக்களின் பெயர்களை மாற்றி மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கும் போது அது வரையில் அந்த லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுகின்ற அச்சிடல் நிறுவனத்திற்கே அச்சிடல்செயற்பாடுகளை வழங்குதல் தேசிய லொத்தர் சபையினால் இது வரை பயன்படுத்தப்பட்ட முறைமையாகும். அதன் பிரகாரம் அது வரையில் சுபிரி வாசனா லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அச்சிடல் நிறுவனமான சிலோன் பிஸ்னஸ் எப்லயன்ஸ் (தனியார்) கம்பனி ஊடாக காணப்பட்ட அச்சிடல் கட்டணத்தின் கீழ் NLB ஹந்தஹன லொத்தர் சீட்டின் உரிய அச்சிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், அந்த அச்சிடலுடன் காணப்பட்ட உடன்படிக்கை புதிய உடன்படிக்கையாக ஏற்படுத்தும் தேவையொன்று எழுந்திருக்கவில்லை. | லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு வழங்கும் பணிகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3 வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2022 ஆம் ஆண்டின் பாதீடு 2021 திசெம்பர் 29 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பாதீட்டின் பின்னர் 2022 ஆகஸ்ட் 16 மற்றும் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதிகளில் மீண்டும் திருத்தப்பட்டது. எனினும், இந்த ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு இரண்டாவது தடவை திருத்தும் போது 12 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்ததுடன், அந்த இரண்டாவது திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீடு மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளபடியான பெறுமதிகளுக்கு இடையே 19 சதவீதம் முதல் 58 சதவீதம் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பாதீட்டை பயன்படுத்திக் கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | நாட்டில் காணப்பட்ட அதிகூடிய பணவீக்கநிலைமை, வெளிநாட்டு ஒதுக்கங்கள் குறைந்ததன் அடிப்படையில் அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அரசாங்கத்தின் செலவின முகாமைத்துவத்திற்கு இணையாக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நிறுவன முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபையின் தேவையின் அடிப்படையில் 03 சந்தர்ப்பங்களின் போது பாதீடு திருத்தப்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீட்டை தயாரிக்கும் போது சபைக்கு தாக்கங்களை ஏற்படுத்தும் மூலங்களை கவனத்தில் கொண்டு இயலுமானவரை சரியாக மேற்கொள்வதன் மூலம் சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |